மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கடந்த ஆண்டு கொடுக்கப்பட்ட பணம் ஒரு ஏக்கருக்கு ரூ. 5.98 புதுக்காசு என்ற விகிதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு காலமாக கொஞ்சம் அரசாங்கமே மானியத் தொகை கொடுத்து வந்தது. அதைப்பற்றி இப்பொழுது யோசித்துக் கொண்டிருக்கிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்க மானியம் கொடுத்ததை நிறுத்தியிருக்கிறது என்று தெரிகிறது. மீண்டும் மானியத் தொகையை கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நிறுத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். அது மறுபரிசீலனையில் இருக்கிறது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, சமீபத்திலே தஞ்சாவூர் ஜில்லாவில் விமானம் மூலம் மருந்து தெளித்தபோது, விமானிக்கு ஆபத்து ஏற்பட்டு இறந்துவிட்டாரே, அவருக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விமானம் மூலம் மருந்து தெளிப்பதில், அரசாங்கமே செய்வது இல்லை. தனிப்பட்ட கம்பெனிக்காரர்களோடு ஒப்பந்தம் செய்கிறோம். டெண்டர் கொடுத்துத்தான் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். பைலட் இறந்துவிட்டார் என்றால், அந்தக் கம்பெனிக்காரர்தான் தரவேண்டும். அரசாங்கம் தரவேண்டும் என்று இல்லை. அவர்கள் நிச்சயமாக இன்ஷூர் செய்திருப்பார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, விமானத்தின் மூலம் பூச்சி மருந்துகளைத் தெளிக்கிறபோது, குறிப்பிட்ட ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலங்களுக்கு மட்டும்தான் பூச்சி மருந்து தெளிக்கப்படுகிறது. இதனால் பக்கத்தில் இருக்கிற நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, பக்கத்து நிலக்காரர்கள் ஒப்புதல் தந்தாலும், தராவிட்டாலும் அரசாங்கமே எல்லா நிலங்களுக்கும் பூச்சி மருந்தை தெளித்துவிட்டு, அதற்குரிய கட்டணத்தை நிலவரியோடு சேர்த்து வசூலிக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. இப்போது குறைந்த நிலம் வைத்திருப்பவர்கள் கூட இதன் அவசியத்தை உணர்ந்து விமானத்தின் மூலம் பூச்சி மருந்தை தெளிக்க வேண்டுமென்று அரசாங்கத்தையும், பஞ்சாயத்தையும் கேட்டுக்கொள்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட நிலைமை வரவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலம்பாடி கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

*579 **வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமராட்சி யூனியனைச் சேர்ந்த அத்திப்பட்டு பஞ்சாயத்திலுள்ள ஆலம்பாடி கிராமத்து அரிசனங்களுக்கு மனைகள் வழங்கும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1960-ம் ஆண்டு தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம் அத்திப்பட்டு கிராமத்தில் அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு 2·90 ஏக்கர் அரசாங்க புஞ்சை, நஞ்சை நிலம் கையகப்படுத்தப்பட்டது. மேற்படி கிராமத்தில் வீடில்லா 53 அரிசனங்களுக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டு பட்டாக்களும் அளிக்கப்பட்டன.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு பட்டா வழங்குவதில் அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை என்ன ? முன்பு பட்டா வழங்கப்பட்டிருக்கிற அரிசனங்கள் வீடுகளைக் கட்டிக்கொள்ள முடியாமல்

1970 மார்ச் 28]

இருக்கிறார்களே, அவர்களுக்கு எந்த வருஷம் நிலம் வழங்கப்பட்டதோ அதை அடிப்படையாக வைத்து அவர்களுக்கு முதலிடம் கொடுத்து, வீடு கட்ட மானியங்களைக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அரிசன மானியத்தின்மீது பேசும்போது விவரமாகக் கூறியிருக்கிறேன். ஏற்கெனவே நிலங்களைக் கையகப்படுத்தி அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தில், யாரிடமிருந்து, பணம் கொடுத்து நிலத்தைக் கையகப்படுத்தியதோ, அந்த நிலக்காரர்களுடைய ஜாதியுணர்ச்சியின் காரணமாக, அரிசனங்கள் வீடுகளைக் கட்ட முடியாமல் தடுக்கப்பட்டு வருகிறார்கள். இந்த நிலைமை அன்றாடம் காணுகின்ற காட்சியாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளில் இப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் இருவரையும் அழைத்துப் பேசி சமரசம் செய்துவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் வீட்டுமனை கொடுத்தும் வீடுகள் கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு வீட்டிற்கு ஆயிரம் ரூபாய் என்ற வகையில், சென்னை மாநகரத்தில் கட்டுவதுபோல தீப்பிடிக்காத வீடுகளாகக் கட்டுவதற்கு இந்த ஆண்டு 5 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 60, 65 ஆயிரம் மனைக்கட்டுகள் வீடுகள் கட்டாமல் இருக்கின்றன.

Buckingham Canal

*580 Q.—DR. H. V. HANDE / THIRU N. KITTAPPA : } Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that the estimates Committee of Parliament has declared Buckingham Canal, a national waterway;

(b) whether the Estimates Committee of Parliament has suggested an integrated development of Buckingham Canal by this Government and the Government of Andhra Pradesh;

(c) if so, whether this Government has any proposal to negotiate with the Government of Andhra Pradesh in this regard and the details thereof;

(d) whether it is a fact that the Centre has approved a Rs. 40 lakh scheme for certain essential improvements to Buckingham Canal; and

(e) whether this sum is included in the State's estimate of Rs. 4.7 crores?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) பக்கிங்காம் கால்வாயைத் தேசிய நீர்வழியாக அறிவிப்பது குறித்தும் கருதிப் பார்க்கப்படவேண்டும் என்று 1968-69-ம் ஆண்டுக்கான மக்கட் பெருமன்ற மதிப்பீட்டுக் குழு இந்திய அரசுக்குப் பரிவுரை செய்துள்ளது.

(இ) பக்கிங்காம் கால்வாய் முழுவதையும் மேம்படுத்துவதற்கான ஒருங்கு இணைந்த திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு இன்றியமையாத் தேவை உள்ளதென்று மதிப்பீட்டுக் குழு தனது அறிக்கையில் வற்புறுத்தியுள்ளது. மேலும், கால்வாயின் நீண்டகால மேம்பாட்டிற்கான திட்டத்தின் தொழில் நுட்ப, பொருளாதார வாய்ப்பு குறித்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டுமென்றும், அதன் பிறகு இத்திட்டத்தை மேற்கொண்டும் ஆய்வு செய்வதற்காக ஆய்வுக்குழு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டுமென்றும் கருத்து தெரிவித்துள்ளது.